ஒப்பன் வெல் வெட்டி அந்த குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குடிசாதனள்ளி 950 மக்கள் தொகை கொண்ட குடிநீர் பிரச்சினை இருக்கிற கிராமம். அந்தப் பகுதியில் 1977-78 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒரு கையிறைப்பான் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் 1982-83 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் ஒரு கையிறைப்பானும், 1989-90 ஆம் ஆண்டில் முடுக்கிவிடப்பட்ட திட்டத்தின் கீழ் ஒரு கையிறைப்பானும் அமைக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. குடிசாதனள்ளி கிராமத்தின் ஒவ்வொரு குடியிருப்புக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 16 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1995-96-ம் நிதி ஆண்டில் 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வழங்கும் குடியிருப்புகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதால் இனி வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் வாரிய விதிகளின்படி இந்த கிராமத்திற்கு நிதிநிலைமைக்கு ஏற்ப திட்டம் செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்176, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

176—

திருப்பூரைத் தனிப் பஞ்சாயத்தாகப் பிரித்தல்

**33827—திரு. சி. சுவாமிநாதன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார்கோவில் ஒன்றியம், திருப்பூர் இரு வேறு பஞ்சாயத்துக்களில் இருப்பதால் திருப்பூரைத் தனிப் பஞ்சாயத்தாகப் பிரித்து செயல்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

1996 மார்ச் 1]

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், திருப்பூர் இருவேறு பஞ்சாயத்துக்களில் வருகிறது. அங்கே இதுபோல் இரு பஞ்சாயத்துக்களில் அடங்கிய பல கிராமங்கள் உள்ளன. இந்த மாதிரி இரு பஞ்சாயத்துக்களில் இருப்பதால் நிர்வாகத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த திருப்பூர் கிராமத்தை ஏதேனும் ஒரு பஞ்சாயத்தில் இணைத்து உத்தரவிட ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் நீக்கப்பட்டு 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு சட்டத்திற்கு இணங்குகிற வகையில் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு 22-4-1994 முதல் அமலாக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவைகளை அமைக்கின்ற பணி, பிரிக்கின்ற பணி, தரம் உயர்த்துகின்ற பணி போன்ற கருத்துக்கள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்கும் வரை தள்ளி வைக்கலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் தேர்தல் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்கும் வரை இதுபோன்ற கருத்துகளின் மீது நடவடிக்கை எடுக்க இயலாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 177, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

177—

ஆதிதிராவிடர் காலனிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*39754—திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், மைக்கேல்பாளையம் ஊராட்சி ஆத்தப்பம்பாளையம் ஆதிதிராவிடர் காலனிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?